## அலகு- 2 வகுப்பறை கற்பித்தலில் மதிப்பிடுதல்

**பரிமாற்றக்கோட்பாடு**

ஜான்லாக் என்பவரால் வழங்கப்பட்ட கற்பித்தல் கோட்பாட்டில் மிகவும் புகழ்பெற்ற வடிவம் பரிவர்த்தனை மற்றும் பரிமாற்றக் கோட்பாடாகும். மாணவர் பரிமாற்ற மதிப்பீடு என்பது கற்பித்தல் சூழ்நிலைகளை உருவாக்கும் செயல்முறையாகும். பரிவர்த்தனை மற்றும் பரிமாற்று அணுகுமுறைகள் நீடித்த கற்றல் அனுபவங்களை உருவாக்குகிறது. இந்த அணுகுமுறையில் ஆசிரியர்களின் பங்கு மாணவர்களுக்கு அவர்களின் உள்ளார்ந்த திறனை கண்டுபிடித்து அவர்களின் நலன்களையும் தனிப்பட்ட திறமைகளையும் முழுமையான அளவிற்கு வளர்க்க உதவும்.

**நடத்தைவாதம்:**

இந்த கோட்பாடு நடத்தையில் மாற்றங்களைக் கொண்டது. பாவ்லோவ் மற்றும் ஸ்கின்னர் போன்ற சிந்தனையாளர்களின் நடத்தையில் பள்ளி சுற்றுச்சூழலில் வெளிப்புற ஊக்கத்தினால் ஏற்படுகின்ற கற்பிப்பவரின் நடத்தை மாற்றத்தில் இருக்கும்போது கற்றல் நடைபெறுகிறது.

**நன்மைகள்:**

- ஆசிரியர்களுக்கு ஒரு பாடத்தின் குறிக்கோளைஅறிந்து கொள்ள உதவுகிறது.
- எளிய கருத்திலிருந்து சிக்கலான கருத்துக்களை நோக்கிச் செல்ல உதவுகிறது.
- கற்றலில் மாணவர்களிடம் நல்ல புரிந்துணர்வை ஏற்படுத்துகிறது.
- மாணவர்களின் சமூகப் பிரச்சனைகள் மற்றும் தனது தனிப்பட்ட பிரச்சனைகளை எளிதில் தீர்த்துக் கொள்ள வழிவகை செய்கிறது.

**குறைபாடுகள்:**

- கற்பவரின் திறமை வெளிப்பட வாய்ப்புகள் இல்லை
- கற்பிப்பவரின் கருத்துகளே உள்ளடக்கமாக உள்ளது.
- உளவியல் ரீதியாக கற்றலுக்கு வாய்ப்பு தரப்படவில்லை
- படைப்பாற்றல் கல்வியை வளர்க்க வழிவகை செய்யவில்லை

**அறிதிறன் மதிப்பீட்டு அணுகுமுறை:**

ஜீன் பியாஜே என்ற உளவியலாளர் கருத்துப்படி "அறிவாற்றல் கோட்பாடு என்பது நினைவு, உள்நோக்கம் மற்றும் பகுத்தறிதல் ஆகியவற்றைப் பயன்படுத்தி கற்றல் நடைபெறுகிறது என்கிறார்". புலனுணர்வு சார்ந்த உளவியலாளர்கள் அறிவாற்றல் அளவைப்பெற்றுள்ளனர். அதாவது கற்பவர் கற்பிப்பவரிடையே உள்ள தகவல்தொடர்பை வலுப்பெறச் செய்துள்ளனர்.

**தொடர் மற்றும் முழுமையான மதிப்பாய்வு:**

1. கல்விசார் செயல்பாடுகள் மற்றும் கல்விஇணைசெயல்பாடுகள்
2. கற்போரின் முழுமையான வளர்ச்சிக்கு வித்திடுதல்
3. தான் கற்றவற்றை பகுப்பாய்வு செய்து மதிப்பீடு செய்யக் கற்றல்.
4. சமூக மற்றும் சுற்றுச்சூழல் சார்ந்த சிக்கல்களைஅறிதல்
5. பிறருடன் இசைந்து மகிழ்ச்சியாக பணிபுரிதல்
6. பள்ளிக்கு உள்ளேயும் வெளியேயும் எதிர்கொள்ளும் சூழலுக்கு ஏற்ப நடந்து கொள்ளல்.

**மதிப்பாய்வின் பரிமாணங்கள்:**

- கற்றல் மதிப்பாய்வு
- கற்றலுக்கான மதிப்பாய்வு
- மதிப்பாய்வே கற்றல்
- கற்றலில் மதிப்பாய்வு

**செயல் திட்டம் அடிப்படையிலான மதிப்பாய்வு**

மாணவர்களிடம் செயல்திட்டத்தை அமைத்து குழுவாகவோ அல்லது தனியாகவோ மாணவர்களை செயல்பட வைத்து மதிப்பாய்வு செய்யலாம்.

**கருத்தரங்கு**

இது ஒரு கற்பித்தல் நுட்பம் பெரும்பாலும் உளவியலின் உயர்அறிவுசார் எழுச்சிசார் மற்றும் உணர்ச்சிசார் களம் போன்றவைகளை நோக்கமாகக் கொண்டு அதை அடைவதற்கான வழிமுறையாக பயன்படுத்தப்படுகிறது. கருத்தரங்கம் என்பது இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட பேச்சாளர்கள் ஒரு கொள்கையைப் பற்றியோ தொடர்செயல்பாடுகளைப் பற்றியோ அல்லது நிகழ்வைப் பற்றியோ அல்லது தீர்வைப் பற்றி பேசுவது ஆகும்.

**கருத்தரங்கின் இயல்புகள்**

- ஒரு பாடத்தலைப்பு தொடர்பான விரிவான புரிதலைத் தருகிறது.
- சூழ்நிலைக்கேற்ப தன்னை சரிசெய்து கொள்ளவும் மற்றும் கூட்டுணர்வு போன்றவைகளை மேம்படுத்துகிறது.
- ஒரு பாடத்தலைப்பு அல்லது ஒரு கருத்து தொடர்பான பல கண்ணோட்டங்களைக் கொடுக்கிறது.

**கருத்தரங்கை அமைப்பதிலுள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள்:**

கருத்தரங்கில் கேள்வி கேட்டல் பகுதியை முறைப்படுத்தி கவனமாக அமைக்க வேண்டும். கருத்தரங்கின் நெறியாளர் அல்லது கட்டுப்பாட்டாளர்கள் பேச்சாளர்களை சரியான தொடர் வரிசையில் அழைத்து வரிசைப்படுத்தி கருத்தரங்கை அமைக்க வேண்டும்.

**கருத்தரங்கின் சில மாதிரி தலைப்புகள்:**

1. ஆசிரியக் கல்வியும் தற்போதைய நிலையும்
2. கல்வி ஆராய்ச்சியில் தரக்கட்டுப்பாடு
3. கல்வி கற்பித்தலில் கல்வி தொழில்நுட்பம்
4. சுற்றுச்சூழல் விழிப்புணர்வு
5. விழுமக்கல்வி

**கருத்தரங்கின் குறைகள்:**

- பார்வையாளரின் புரிதலை அறிந்து கொள்ள இயலாது.
- பார்வையாளருக்கு வாய்ப்பு கடைசியில் கொடுக்கப்படுவதால் இடைவினை புரிய இயலாது.
- சில நேரங்களில் உளவியலின் உயர்நிலை அறிவுசார்களத்தை மேம்படுத்தும் நுட்பம் இல்லாமல் இருக்கிறது.
- நெறியாளர்களின் கட்டுப்பாடு இன்றி கருத்தரங்கம் செயல்படுதல் இயலாது.

**ஒப்படைப்புக்கான முறை:**

- ஆண்டு பாடத்திட்டத்தை பல பகுதிகளாக பிரித்து தலைப்பு வாரியாக அமைக்க வேண்டும்.
- ஒப்படைப்புகளை தயார்செய்யவும் நிறைவு செய்யவும் ஆசிரியர் வழிகாட்டவேண்டும்.
- கருத்தியல் கொள்கைள் சார்ந்த தலைப்புகளில் ஒப்படைப்பு கொடுக்கலாம்.

**நன்மைகள்:**

- மாணவர்களின் தனியாள் வேற்றுமைக்கேற்ப ஒப்படைப்புகளை வழங்க இயலுகிறது.
- மாணவர்களிடம் பொறுப்புணர்ச்சியையும் காலந்தவறாமையையும் தானே கற்றல் மற்றும் தன்னம்பிக்கையையும் வளர்க்கிறது.
- மாணவர் ஆசிரியர் உறவு மேம்படுகிறது.
- செய்துகற்றல் என்ற உளவியல் விதியின் அடிப்படையில் கற்றல் மேம்படுகிறது.
- மாணவர் தங்களுக்கு கொடுக்கப்பட்ட ஒப்படைப்பு பணிகளில் அதிக கவனம் செலுத்துவதால் மாணவர்களிடம் நல்லொழுக்கம் வளர்கிறது.

**குறைகள்:**

- மீத்திற மாணவர்களுக்கு மட்டும் ஏற்றது.
- ஆசிரியர்களுக்கு பணிச்சுமை அதிகமாகிறது.
- மாணவர்களுக்கு பொருட்செலவை ஏற்படுத்துகிறது.
- பாடத்திட்டத்தை குறிப்பிட்ட காலத்திற்குள் முடிக்க இயலாது.

**மாணவர்களின் செயல்பாட்டுத் தொகுப்பு பதிவேடு அடிப்படையிலான மதிப்பாய்வு :**

மாணர்களின்அறிதல்திறன் புரிதல்திறன் மற்றும் பயன்படுத்தும்திறன்களை வகைப்படுத்துகிறார்.

மாணவர்களின் பல்வேறுதிறன்களை கணிப்பதற்கான குறியளவை நிர்ணயிக்கிறார்.
நோக்கத்தின் அடிப்படையில் பட்டியலிட்டவைகளைக் கொண்ட ஆசிரியர் தங்களது பாட சம்பந்தமான திறன்களுக்கு ஆசிரியர் மதிப்பெண் தருகின்றனர்.

**தரவரிசை:**

கல்வியில் தரவரிசை என்பது தரப்படுத்தப்பட்ட அளவிடுதலைக் குறிக்கிறது.
இது வெவ்வேறு நிலைகளை அளவிடுதலைக் குறிக்கவும் பயன்படுத்தப்படுகிறது. தரவரிசை A,B,C,D,E மற்றும் Fஎன்ற வரிசையில் 1 முதல் 6 வரை மாணவர்களுக்கு தரவரிசைத் தரப்படுகிறது.

| தரநிலை | தரப்புள்ளி | தரவிளக்கம் |
|---|---|---|
| A | 5 | சிறப்பு நிலை |
| B | 4 | மிக நன்று |
| C | 3 | நன்று |
| D | 2 | திருப்திகரம் |
| E | 1 | முயற்சி தேவை |

**தரவரிசைப்படுத்துவதற்கான காரணங்கள்:**

- மாணவர்களின் செயல்பாடுகளை ஒருங்கிணைத்தல்
- மாணவர்கள் கற்றலில் மேலும் முன்னேற்றமடையச் செய்தல்
- மாணவர்களது எதிர்கால செயல்பாட்டுக்கான அவர்களது நிலையை உயர்த்துதல்
- மாணவர்களுக்கு பின்னூட்டம் அளித்து ஊக்கப்படுத்துதல்.
- மாணவர்களது சிறிய மதிப்பெண் வேறுபாட்டை தவிர்த்து அவர்களது தாழ்வுமனப்பான்மையை போக்க உதவுதல்.

**மதிப்பிடுதலுக்கான வகுப்பறை நடைமுறைகள்:**

- மாணவ ஆசிரியர் உரையாடல் மதிப்பிடுதல்
- மதிப்பெண் மூலம் பின்னூட்டம் அளித்தல்
- ஒப்பார் குழுவினர் மற்றும் தானே மதிப்பிடுதல்
- தொகுத்தறி மதிப்பீடு தேர்வுகளை வளரறி மதிப்பீட்டுக்கு பயன்படுத்துதல்

**தொகுத்தறி மதிப்பீட்டு வகை கேள்விகள் மாணவர்களின் உண்மையான மேம்பாட்டை அமைத்தல் :**

மாணவர்களிடம் வகுப்பறையில் ஆசிரியர் பாடங்களை கற்பிக்கும் போது வளரறி மதிப்பீட்டிற்காக கேட்கும் கேள்விகளுக்கு மாணவர்கள் பதில் அளிக்க வேண்டும். ஆனால் தொகுத்தறி மதிப்பீட்டுக் கேள்விகளைக் கொண்டு சிறுஅளவில் நடத்தப்படும்தேர்வுகள்

உண்மையான மதிப்பீட்டில் மேம்பாட்டில் ஏற்படுத்தும்.

**ஒப்பார் மற்றும் தானே மதிப்பிடுதல்**

வகுப்பறையில் அன்றாடக் கற்பித்தலுடன் வளரறி மதிப்பீட்டின்படி கற்றலை மதிப்பிடுவதற்காக தொகுத்தறி மதிப்பீட்டிற்கான செயல்பாடுகளில் சில வினாக்களை தெரிவுசெய்து மாணவர்களை குழுவாகப் பிரித்தோ தனித்தனியாகவோ உடனடியாக பின்னூட்டத்தை வழங்கி கற்றலை மேம்படுத்தலாம்.